# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2021.09.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல்

**ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, தொகைக்குவிப்பு, தயாரிப்பு மற்றும் கைமாற்றல் என்பவற்றைத் தடைசெய்தலும் அழித்துவிடுதலும் பற்றிய சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** | **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல்**

*ச.வ. - ஓ. 40/2018*

**ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, தொகைக்குவிப்பு, தயாரிப்பு மற்றும் கைமாற்றல் என்பவற்றைத் தடைசெய்தலும் அழித்துவிடுதலும் பற்றிய சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை*

ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, தொகைக்குவிப்பு, தயாரிப்பு மற்றும் கைமாற்றல் என்பவற்றை தடைசெய்தலும் அழித்துவிடுதலும் பற்றிய சமவாயம் 1997 ஆம் ஆண்டு செத்தெம்பர் 18 ஆந் தேதியன்று ஒஸ்லோவில் ஆளணியினருக்கெதிரான நிலக் கண்ணிவெடிகள் பற்றிய சர்வதேச கூட்டுமொத்த தடைவிதிப்பொன்றின்மீதான இராஜதந்திரிகள் மாநாடுமூலம் நிறைவு செய்யப்பட்டதாதலாலும்:

சமவாயமானது 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 13 ஆந்தேதியன்று இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உடன்பட்டுக் கொள்ளப்பட்டிருந்ததாதலாலும்:

அத்துடன் மேற்சொல்லப்பட்ட சமவாயத்தின் கீழான இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான சட்ட ஏற்பாட்டைச் செய்தல் இலங்கை அரசாங்கத்திற்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### முதனிலையானவை

**இச்சட்டத்தின் ஏற்புடைமை**

*2*. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் -

(அ) இலங்கையினுள்ளும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியிலும் உள்ள எவரேனும் ஆளினால்; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே எவரேனும் இலங்கைப் பிரசையினால்,

செய்யப்படும் 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட செயல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**தவறுகள்**

*3*. (1) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டதனைத் தவிர, ஆளொருவர் -

(அ) ஆளணிக்கெதிரான கண்ணிவெடியொன்றைப் பெறுதலோ, பயன்படுத்துதலோ, அபிவிருத்திசெய்தலோ, தயாரித்தலோ, இறக்குமதி செய்தலோ, ஏற்றுமதி செய்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ, கொள்வனவு செய்தலோ, வழங்குதலோ, இடம்பெயர்த்தலோ, கொள்ளுதலோ, உடைமை கொண்டிருத்தலோ, வைத்திருத்தலோ, தொகைக்கு வித்தலோ அல்லது கைமாற்றுதலோ ஆகாது; அத்துடன்

(ஆ) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்றை ஒரு வெடிபொருளின் வேறேதேனும் வடிவமாகத் திரிபு படுத்துதலோ அல்லது மாற்றுதலோ ஆகாது.

(2) இப்பிரிவினை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம்

ஒன்றிற்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

விதிவிலக்குகள்

**4**. (1) ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர், தனது தொழிலின்போது அல்லது கடமைகளின்போது, கண்ணிவெடியைக் கண்டுபிடித்தல், கண்ணிவெடியை அப்புறப்படுத்துதல், கண்ணிவெடியைச் செயலிழக்கச் செய்தல் அல்லது கண்ணிவெடியை அழித்துவிடுதல் பற்றிய தொழில்நுட்பங்களை விருத்திசெய்வதற்கும், அவற்றில் ஆட்களைப் பயிற்றுவிப்பதற்குமான நோக்கங்களுக்காக 5 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்றைப் பெறலாம், பயன்படுத்தலாம், விருத்திசெய்யலாம், தயாரிக்கலாம், இடம்பெயர்க்கலாம், கொள்ளலாம், உடைமை கொண்டிருக்கலாம், வைத்திருக்கலாம் அல்லது கைமாற்றலாம்.

(2) பதினோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் தனது தொழில் அல்லது கடமைகளின்போது அத்தகைய ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியைச் செயலிழக்கச் செய்கின்ற அல்லது அழித்துவிடுகின்ற நோக்கங்களிற்கென ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியை கைப்பற்றலாம், பெறலாம், கைமாற்றலாம், கொள்ளலாம் அல்லது வைத்திருக்கலாம்.

குறித்தசில நோக்கங்களுக்காக அமைச்சர் ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிக்கு அதிகாரமளிக்கலாம்

**5**. (1) கண்ணிவெடியைக் கண்டுபிடித்தல், கண்ணிவெடியை அப்புறப்படுத்துதல், கண்ணிவெடியைச் செயலிழக்கச் செய்தல் அல்லது கண்ணிவெடியை அழித்துவிடுதல் என்பவற்றின் தொழில்நுட்பங்களை விருத்தி செய்கின்ற அல்லது அவற்றில் ஆட்களைப் பயிற்றுவிக்கின்ற நோக்கங்களுக்காக அமைச்சர் காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் எண்ணிக்கையொன்று வைத்திருக்கப்படுவதற்கு அல்லது கைமாற்றப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினருக் கெதிரான கண்ணிவெடிகளின் எண்ணிக்கை மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காகக் கட்டாயமாக அவசியமாகவுள்ள குறைந்தபட்ச எண்ணிக்கையை விஞ்சுதலாகாது.

தகவலை வழங்குதல்

**6**. (1) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியைப் பெறுகின்ற, பயன்படுத்துகின்ற, விருத்திசெய்கின்ற, தயாரிக்கின்ற, இடம்பெயர்க்கின்ற, கொள்ளுகின்ற, உடைமை கொண்டிருக்கின்ற, வைத்திருக்கின்ற அல்லது கைமாற்றுகின்ற ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர்–

(அ) செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய செயற்பாடுகள் பற்றிய தகவலை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி தொடர்பாகவும் எந்தநோக்கத்திற்காக அத்தகைய ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி பயன்படுத்தப் படுகின்றதோ அந்த நோக்கம் தொடர்பாகவும் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்;

(இ) அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்ட படிவம் ஒன்றில் அத்தகைய ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி தொடர்பாகக் காலாகால அறிக்கைகளை அப்பதிவேடு களிலிருந்து தயாரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான கால இடைவெளி களில் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அந்தக் காலாகால அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.

(2) விதித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில், (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அமைச்சருக்குத் தகவல் அனுப்பியுள்ள ஆயுதந்தாங்கிய படையுறுப்பினர்களின் அத்தகைய உறுப்பினரிட மிருந்து அல்லது பொலிசு அலுவலரிடமிருந்து அமைச்சர் விசேட அறிக்கைகளைக் கோரலாம்.

(3) நியாயமான சாக்கின்றி (1) ஆம், மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்றவரான ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

*பிழைவழி உய்க்கும் கூற்றுக்களும் ஆவணங்களும்*

**7**. ஆறாம் பிரிவின்கீழ் ஏதேனும் ஆவணத்தைத் தயாரிப்பதில் அறிந்துகொண்டு, ஆவணத்தில் முக்கியமான விபரங்களில் பிழைவழி உய்க்கின்ற கூற்றை அளிக்கின்ற அல்லது ஏதேனும் விடயத்தை விட்டுவிடுகின்ற ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

## பாகம் II

## ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியை அழித்துவிடுதல்

*அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப்பட்ட ஆளணியினருக் கெதிரான கண்ணி வெடிகள்*

**8**. ஐந்தாம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினருக் கெதிரான கண்ணிவெடிகளின் எண்ணிக்கை தவிர, அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப் பட்ட எல்லா ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளும் அழித்துவிடப்படுவதனைச் செயலாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*அரச காணியில் ஆளணியினருக் கெதிரான கண்ணி வெடிகள்*

**9**. (1) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகள் இடப் பட்டுள்ளனவாக அறியப்பட்டதும் அல்லது சந்தேகிக்கப்பட்டதும் அரசினால் அல்லது அரசாங்க நிறுவனங்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட காணியினுள்ளான இடப்பரப்புக்களை அடையாளங்காண்பதற்கான அல்லது அடையாளங்காண்பதற்குச் செய்விப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் செயலாளர் எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான இடப்பரப்புகளை அடையாளங் காண்பதன்மேல், செயலாளர், ஆளணியினருக்கெதிரான எல்லா கண்ணிவெடிகளும் அழித்துவிடப்படும்வரை, சுற்றளவைக் குறியிடுவதற்கும், பொதுமக்கள் உட்செல்லாது தவிர்ப்பதனைப் பயனுள்ளவகையில் உறுதிப்படுத்துவதற்கு வேலியிடுதல் மூலம் அல்லது வேறு வழிவகைகள்மூலம் கண்காணிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் மிகச்சிறந்த எத்தனங்களை எடுத்தல் வேண்டும்.

**தகவல் வழங்குவதற்கான கடப்பாடு**

**10.** (1) எவரேனுமாள் கண்ணிவெடியொன்றைக் கண்டுபிடிக்குமிடத்து, அத்தகைய ஆள் ஆயுதந்தாங்கிய படையுறுப்பினரின் ஒருவருக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள், ஆயுதந்தாங்கிய படையுறுப்பினர் அல்லது பொலிசு அலுவலர் இயைபான வளவுகள் வந்தடையுமுன்னர் அந்த ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிக்கவைக்கப்படமாட்டாதென்பதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.

**தனியார் வளவுகளில் ஆளணியிருக்கெதிரான கண்ணிவெடி**

**11.** (1) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்று எவையேனும் தனியார் வளவுகளிலுள்ளதெனச் சந்தேகிப்பதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து அத்தகைய அலுவலர்–

(அ) வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் சம்மதத்துடன், நியாயமான எல்லா நேரங்களிலும் அத்தகைய வளவுகளினுட் பிரவேசித்து அத்தகைய வளவுகளைத் தேடுகையிடலாம்;

(ஆ) அத்தகைய ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி உடனடி ஆபத்தாகவிராதிருப்பதனைச் செய்யலாம்;

(இ) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியில் அல்லது அத்தகைய கண்ணிவெடிக்கு அருகாமையிலான ஒரு பொருளில் அல்லது இடத்தில் துலாம்பரமானவொரு நிலையில் எச்சரிக்கையொன்றை ஒட்டிவிடலாம்;

(ஈ) அத்தகைய வளவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி தொடர்பாக ஏதேனும் பொருளை அல்லது ஆவணத்தைக் கட்டுக்காப்பில் எடுக்கலாம்;

(உ) ஏதேனும் ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியைக் கைப்பற்றுதலும், அகற்றுதலும், தடுத்துவைத்தலும் நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்ததாக விருப்பின் அவ்வாறு செய்யலாம்;

(ஊ) அத்தகைய வளவுகளில் குடியிருக்கின்ற எவரேனுமாளை வினவலாம்; அல்லது

(எ) அத்தகைய வளவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி பற்றிய புலனாய்வொன்றை நிறைவேற்றுவதற்குச் செய்யவேண்டியது அவசியமாகவுள்ள அல்லது வசதியாகவுள்ள ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கடமைகள், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறைக்கும் நடவடிக்கைமுறைக்கும் இணங்க ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரினால் அல்லது பொலிசு அலுவலரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது பொலிசு அலுவலர், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்று எவையேனும் தனியார் வளவுகளில் உள்ளதென சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது பொலிஸ் அலுவலர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக அத்தகைய சந்தேகத்தினை செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் எவையேனும் தனியார் வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது பொலிசு அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அவரினால் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய உதவிகளை வழங்குதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், அத்தகைய வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைத் தேடுகையிடுவதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரை அல்லது பொலிசு அலுவலரொருவரை அனுமதிக்க மறுக்கின்றவிடத்து, ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது பொலிசு அலுவலர், அவ்வளவுகள் தொடர்பில் 13 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்றின்கீழ் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைத் தேடுகையிடுதல் வேண்டும்.

*தவறுகள்*

**12.** (1) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்றைக் கண்டுபிடிக்கின்றவரும் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பின ரொருவருக்கு அல்லது பொலிசு அலுவலரொருவருக்கு அத்தகைய கருமத்தை அறிவிக்கத் தவறுகின்றவருமான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) பதினோராம் பிரிவின் கீழ் கடமைகளை நிறைவேற்றுவதில் ஆயுதங்தாங்கிய படையுறுப்பினரொருவரை அல்லது பொலிசு அலுவலரொருவரை தடுக்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) பதினோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தரப்பட்ட எச்சரிக்கையுடன் தலையிடுகின்ற இணங்கியொழுகி செயலாற்றத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

## பாகம் III

### பொதுவான தத்துவங்கள்

**13.** நீதிவானொருவர்-

(அ) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பெறப்படு கின்றது, பயன்படுத்தப்படுகின்றது, விருத்திசெய்யப்படு கின்றது, தயாரிக்கப்படுகின்றது, இறக்குமதிசெய்யப்

படுகின்றது, ஏற்றுமதி செய்யப்படுகின்றது, விற்பனை செய்யப்படுகின்றது, விற்பனைக்கு வெளிக்காட்டி வைக் கப்படுகின்றது, கொள்வனவு செய்யப்படுகின்றது, வழங் கப்படுகின்றது, இடம்பெயர்க்கப்படுகின்றது, கொள்ளப் படுகின்றது, உடைமை கொள்ளப்படுகின்றது, வைத்திருக் கப்படுகின்றது, தொகைக்குவிப்பு செய்யப்படுகின்றது அல்லது எவையேனும் வளவுகளுக்கு இடமாற்றப்படு கின்றது என; அல்லது

(ஆ) நிறைவேற்றப்படின், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக வுள்ள ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கலுடன் அல்லது கையாளுகையுடன் அல்லது ஏதேனும் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப் பட்ட ஏதேனும் பொருள் அல்லது ஆவணம் எவையேனும் வளவுகளில் உள்ளது என,

சந்தேகிப்பதற்குக் காரணமுண்டெனச் சந்தியத்தின்மீதான தகவலின்மூலம் நீதிவானொருவர் திருப்திப்படுமிடத்து, தேடுதல் ஆணைத் தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் எந்நேரத்திலும் அல்லது நேரங்களிலிலும், ஆணைப்பத்திரத்தில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரை அல்லது பொலிசு அலுவலரை, ஆணைப்பத்திரத்தில் பெயர்குறிப் பிடப்பட்ட வளவுகளினுள், அவரது உதவியாளர்களுடனோ அல்லது அவர்களின்றியோ, தேவைப்படின் வலுக்கட்டாயமாகப் பிரவேசித்து அவ்வளவுகளையும் அதன்கண் காணப்படும் எவரேனுமாளையும் தேடுகையிடும்படி அதிகாரமளிக்கின்ற அவ்வாணைப் பத்திரத்தை வழங்கலாம்.

மேல் நீதிமன்றம் இச்சட்டத்தின் கீழான தவறுகளை விளங்குதல்

**14.** கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்திற்கான அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தவறுகளை விசாரிப்பதற்கான, விளங்குவதற்காக அத்துடன் அவற்றுக்கு தண்டனை அளிப்பதற்கான புறநீங்கலான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொதுவான தண்டம்

**15**. (1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இச்சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கி ஒழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது புரிகையில் உடந்தையாகவிருக்கின்ற ஆளொவ்வொருவரும் அதே தவறைப் புரிகின்றார் என்பதுடன், அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் எந்தத் தவறுக்காக வேறு தண்டனை எதுவும் இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்தத் தவறொன்றைப் புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகள்

**16**. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது–

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவொன்றாகவிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது வேறு அதையொத்த அலுவலராக இருந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இராதிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்,

அத்தவறைப் புரிகின்றார்.

இழப்பிக்கப் படுதல்

**17.** *(1)* இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் இதனகத்து முன்னர் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுள் எவற்றையும் விதிக்கலாமென்பதுடன், அது பொருத்தமானதெனக் கருதின், தவறானது எந்தப் பொருட்கள் தொடர்பில் புரியப்பட்டதோ அந்தப் பொருட்கள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் அத்துடன் அத்தகைய பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் எதுவும் அரசுக்கு இழப்பிக்கப் படுவதற்கு உட்பட்டனவாகவுள்ளவெனவும் கட்டளையிடலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட இழப்பித்தலுக்கான கட்டளையொன்று,-

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப் படாதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக் கெதிராக எந்தக் காலப்பகுதிக்குள் மேன்முறையீடொன்று முன்வைக்கப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைவதன்மீது;

(ஆ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டும், அத்துடன் அத்தகைய இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது ஏற்றுக்கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதது உள்ளவிடத்தும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளைக்கெதிராக எந்தக் காலப்பகுதிக்குள் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக் கப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைவதன்மீது; அல்லது

(இ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டிருந்து அத்துடன் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு

நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கெதிராக உயர் நீதி மன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப் பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப் படுத்துகின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்மேல்,

பயனுறுதல் வேண்டும்.

(3) ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைச் சட்டத்தின் பாகம் IX இன் அத்தியாயம் XXXVIII இன் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளை கையுதிர்த்தல் தொடர்பாக, ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**18.** (1) எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அல்லது விதித்துரைக்கப் படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றியும், அமைச்சர் பின்வரும் நோக்கங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்–

(அ) ஆளணியினருக்கெதிரான ஒரு கண்ணிவெடியைக் கொண்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட வளவுகளினுட் பிரவேசித்தலும் அதைத் தேடுகையிடுதலும் தொடர்பாக இணங்கியொழுகப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள்;

(ஆ) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடியையும் ஆவணத்தையும் தடுத்துவைத்தல், கைப்பற்றுதல், அகற்றுதல் மற்றும் அழித்தல் பற்றிய முறையும் நடவடிக்கைமுறைகளும்;

(இ) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி தொடர்பான ஏதேனும் பொருளை அல்லது ஆவணத்தைக் கட்டுக்காப்பில் எடுப்பதற்குப் பின்பற்றப்படவேண்டிய முறையும் நடவடிக்கைமுறைகளும்;

(ஈ) பதிவேடுகளின் படிவங்களும் உள்ளடக்கமும்;

(உ) எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய பதிவேடுகள் வைத்திருக்கப்பட வேண்டுமோ அந்தக் காலப்பகுதி;

(ஊ) வழங்கப்பட வேண்டிய காலகால அறிக்கைகளின் படிவமும் உள்ளீடும்;

(எ) எந்தச் சூழ்நிலைகளில் விசேட அறிக்கைகள் தேவைப்படுகின்றனவோ அந்த சூழ்நிலைகள் மற்றும் அத்தகைய விசேட அறிக்கைகளின் படிவமும் உள்ளீடும்;

(ஏ) எந்த கால எல்லையினுள் அத்தகைய காலகால அறிக்கைகள் மற்றும் விசேட அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டுமோ அந்தக்கால எல்லை; அத்துடன்

(ஐ) அத்தகைய காலகால அறிக்கைகள் மற்றும் விசேட அறிக்கைகள் ஆகியவற்றில் கையொப்பமிடுகின்ற ஆட்கள்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதகாலப்பகுதி ஒன்றினுள் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியைப் பற்றிய அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**19**. இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 25ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களினாலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்யும் மற்றும் அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் நாட்டுக்கு அல்லது அரசாங்கங்களுக்கிடையேயான ஒழுங்கமைப்புக்கு உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். ஒரு நாடு முதலிய வற்றுக்கான உதவி

**20**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய- பொருள்கோடல்

"ஆளணிக்கெதிரான கண்ணிவெடி" என்பது, ஆளொருவர் சமுகமாயிருப்பதன்மூலம், அண்மையில் இருப்பதன்மூலம் அல்லது ஆளொருவருடனான தொடர்பின்மூலம் வெடிக்க வைக்கப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட அத்துடன் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை அங்கவீனர் ஆக்கும் ஊறுபடுத்தும் அல்லது கொல்லும் ஒரு கண்ணிவெடி எனப்பொருள்படும். ஆளல்லாவாறு கையாளுகைக்கெதிரான உபாயங்களுடன் சாதனமிடப் படுகின்ற வாகனமொன்று சமுகமாயிருப்பதன் மூலம், அண்மையில் இருப்பதன்மூலம் அல்லது அதனுடனான தொடர்பின்மூலம் வெடிக்க வைக்கப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட கண்ணிவெடி, அவ்வாறு சாதன மிடப்பட்டதன் விளைவாக ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளாகக் கருதப்படமாட்டாது;

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது முறையே (357ஆம் அத்தியாயமான) தரைப்படை சட்டம், (358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம் மற்றும் (359ஆம் அத்தியாயமான) விமானப்படைச் சட்டத்தின் கீழ் திரப்பட்டு பேணப்படும் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை எனப்பொருள்படும்;

"சமவாயம்" என்பது, 1997 ஆம் ஆண்டு செத்தெம்பர் 18 ஆந் தேதியன்று ஒஸ்லோவில் நடாத்தப்பட்ட ஆளணியினருக்கெதிரான நிலக் கண்ணிவெடிகள்

சர்வதேச மொத்தத் தடை பற்றிய இராஜதந்திர மாநாட்டின் மூலம் முடிவெடுக்கப்பட்ட ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, தொகைக்குவிப்பு, தயாரிப்பு மற்றும் இடமாற்றம் என்பவற்றைத் தடைசெய்தல் பற்றியும் அவற்றின் அழிவு பற்றிய சமவாயம் ஒன்று எனப் பொருள்படும்;

''அரசாங்க நிறுவனம்'' என்பது, ஏதேனும் அமைச்சை, அரசாங்கத் திணைக்களத்தை, பகிரங்கக் கூட்டுத் தாபனத்தை, உள்ளூரதிகார சபையை, 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட தொழில் அல்லது வேறு பொறுப்பு முயற்சியை, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபை ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனியை மற்றும் ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது ஒரு மாகாண சபையினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையை உள்ளடக்கும்;

"கண்ணிவெடி என்பது" நிலம் அல்லது வேறு மேற்பரப்பின்கீழ், அதன்மீது அல்லது அதன் அருகில் இடப்படுவதற்கும் ஆளொருவரின் அல்லது வாகனமொன்றின் சமூகம் மூலம் அண்மை மூலம் அல்லது தொடர்பு மூலம் வெடிக்க வைக்கப்படுவதற்கும் என வடிவமைக்கப்பட்ட வெடிமருந்துகள் எனப் பொருள் படும்;

"அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு இச்சட்டம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"பொலிசு அலுவலர்" என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடை, கடன் என்ற வகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும்;

"செயலாளர்" என்பது அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும்;

"கைமாற்றம்" என்பது தேசிய ஆள்புலத்தினுள் அல்லது தேசிய ஆள்புலத்தில் இருந்து ஆளணிக்கெதிரான கண்ணி வெடிகளை நகர்த்துவதுடன் சேர்த்து அக்கண்ணி வெடிகளுக்கான உரித்து கைமாற்றம் மற்றும் அதன் மீதான கட்டுப்பாட்டை உட்படுத்துகின்றது, ஆனால் வைக்கப்பட்ட ஆளணிக்கெதிரான கண்ணிவெடியை உள்ளடக்குகின்ற ஆள்புலக் கைமாற்றத்தை உள்ளடக்காது.

**21.** இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்